**செய்தி வெளியீடு எண்:160** **நாள்:24.02.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 23.2.2021 அன்று தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்துறையின் கீழ் இயங்கும் பட்டு வளர்ச்சித் துறை சார்பில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள பல்நிலை குளிர்பதன அலகு மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் சார்பில் 1 கோடியே 16 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விற்பனை நிலையம், தொழிற்கூடம் மற்றும் சுற்றுசுவருடன் கூடிய தேன்பொத்தை மற்றும் இலஞ்சி மண்பாண்ட உற்பத்தியாளர்கள் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்க தொழிற்கூடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 14.6.2018 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், தமிழ்நாடு, தேசிய அளவில் வெண்பட்டு உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் தலா 20 லட்சம் பட்டு முட்டைகளை பதனம் செய்யும் திறன் கொண்ட இரண்டு பல்நிலை குளிர் பதன அலகுகள் கிருஷ்ணகிரி மாவட்டம் – ஓசூரிலும், கிருஷ்ணகிரியிலும் செயல்பட்டு வருகின்றன. வெண்பட்டு முட்டை உற்பத்தியினை அதிகரித்து அதனை பதனப்படுத்திட, மேலும் 20 லட்சம் பட்டு முட்டைகளைப் பதனம் செய்யும் திறன் கொண்ட ஒரு பல்நிலை குளிர்பதன அலகு ஒரு கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், சின்னவேடம்பட்டியில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 20 லட்சம் வெண்பட்டு முட்டைகளை பதனம் செய்யும் திறன் கொண்ட பல்நிலை குளிர்பதன அலகினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்த அலகில், கூடுதலாக 20 லட்சம் வெண்பட்டு முட்டை தொகுதிகள் பதனம் செய்து ஆண்டுதோறும் விநியோகிப்பதன் மூலம் கூடுதலாக 3000 முதல் 5000 பட்டு விவசாயிகள் பயன்பெற இயலும். மேலும், அரசு வித்தகங்களில் உற்பத்தி செய்யப்படும் வெண்பட்டு முட்டைகளை தமிழ்நாட்டிலேயே பதனம் செய்து பட்டு

விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதன் மூலம் வெளி மாநிலங்களிலிருந்து வெண்பட்டு முட்டைகள் பெறப்படுவதை குறைக்க இயலும்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய கட்டுப்பாட்டில் செயல்படும் தென்காசி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தில் அமைந்துள்ள தேன்பொத்தை மண்பாண்ட உற்பத்தியாளர்கள் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கத்தின் பழைய தொழிற்கூடங்களை இடித்து, அவ்விடத்தில் 5,500 சதுர அடியில் 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள விற்பனை நிலையம், தொழிற்கூடம் மற்றும் சுற்றுசுவருடன் கூடிய தேன்பொத்தை மண்பாண்ட உற்பத்தியாளர்கள் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்க தொழிற்கூடம் மற்றும் தென்காசி மாவட்டம், கடையநல்லூரில் அமைந்துள்ள இலஞ்சி மண்பாண்ட உற்பத்தியாளர்கள் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கத்தின் பழைய தொழிற்கூடங்களை இடித்து, அவ்விடத்தில் 2,725 சதுர அடியில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள தொழிற்கூடம் மற்றும் விற்பனை நிலையத்துடன் கூடிய இலஞ்சி மண்பாண்ட உற்பத்தியாளர்கள் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்க தொழிற்கூடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இப்புதிய தொழிற்கூடங்களில், மண்பானைகள், பூந்தொட்டிகள், சமையல் பாத்திரங்கள், பொம்மைகள் போன்றவற்றை தொழிலாளர்கள் மழைக்காலங்களில் சிரமமின்றி உற்பத்தி செய்யவும், முடிவுற்ற பொருட்களை இருப்பு வைத்து ஆண்டுதோறும் விற்பனை செய்யவும் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா.பென்ஜமின், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை வாரிய அமைச்சர் திரு. ஜி. பாஸ்கரன், தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., பட்டுவளர்ச்சித் துறை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், இ.ஆ.ப., தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர் திருமதி கி. சாந்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 24.2.2021**